## செப்டம்பர் – 05 – புதன்

### புனித அன்னை தெரேசா

### “ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாக தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்” தி.பா.33:12

**முதல் வாசகம் : 1 கொரிந்தியர் 3 : 1 – 9**

சகோதர சகோதரிகளே, ஆவிக்குரியவர்களிடம் பேசுவதுபோல நான் உங்களிடம் பேசமுடியவில்லை. மாறாக, நீங்கள் ஊனியல்பு கொண்டவர்கள் எனவும், கிறிஸ்துவோடுள்ள உறவில் குழந்தைகள் எனவும் எண்ணிப் பேசுகிறேன். நான் உங்களுக்குத் திட உணவை அல்ல, பாலையே ஊட்டினேன். ஏனெனில், திட உணவை உங்களால் உண்ண முடியவில்லை. இப்போதும் அதே நிலையில் தான் இருக்கிறீர்கள். நீங்கள் இன்னும் உங்கள் ஊனியல்புக் கேற்பவே நடக்கிறீர்கள். ஏனெனில், பொறாமையும், சண்டை சச்சரவும் உங்களிடையே உள்ளன. நீங்கள் ஊனியல்புக்கேற்ப நடந்து மனிதப் போக்கில்தானே வாழ்கிறீர்கள்? ஏனெனில், ஒருவர் ”நான் பவுலைச் சார்ந்துள்ளேன்” என்றும் வேறொருவர் ”நான் அப்பொல்லோவைச் சார்ந்துள்ளேன்” என்றும் உங்களிடையே சொல்லிக் கொள்ளும்போது நீங்கள் மனிதப்போக்கில்தானே நடக்கிறீர்கள்? அப்பொல்லோ யார்? பவுல் யார்? நீங்கள் நம்பிக்கை கொள்ளக் காரணமாயிருந்த பணியாளர்கள்தானே! ஆண்டவர் ஒவ்வொருவருக்கும் அருளியவாறு அவர்கள் தொண்டாற்றுகிறார்கள். நான் நட்டேன் அப்பொல்லோ நீர் பாய்ச்சினார் கடவுளே விளையச்செய்தார். நடுகிறவருக்கும் பெருமை இல்லை. நீர் பாய்ச்சுபவருக்கும் பெருமை இல்லை. விளையச் செய்யும் கடவுளுக்கே பெருமை. நடுகிறவரானாலும் நீர் பாய்ச்சுகிறவரானாலும் ஒன்றுதான். தாம் செய்த வேலைக்கு ஏற்ப ஒவ்வொருவரும் தம் கூலியைப்பெறுவர். நாங்கள் கடவுளின் உடன் உழைப்பார்கள். நீங்கள் கடவுள் பண்படுத்தும் தோட்டம். நீங்கள் அவர் எழுப்பும் கட்டடம்.

**பதில்பாடல் :** ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத்
தேர்ந்தெடுத்த மக்கள் பெறபெற்றோர்.

**நற்செய்தி : லூக்கா 4 : 38 - 44**

அக்காலத்தில் இயேசு தொழுகைக் கூடத்தைவிட்டு, சீமோன் வீட்டிற்குள் சென்றார். சீமோனின் மாமியார் கடுங்காய்ச்சலால் துன்புற்ற நிலையில் இருந்தார். அவர்கள் அவருக்காக இயேசுவிடம் வேண்டினார்கள். இயேசு அவரருகில் நின்று, காய்ச்சலைக் கடிந்துகொள்ள அது அவரைவிட்டு நீங்கிற்று. உடனே அவர் எழுந்து அவர்களுக்குப் பணிவிடை செய்தார். கதிரவன் மறையும் நேரத்தில், எல்லாரும் தங்களிடையே பற்பல பிணிகளால் நலம் குன்றி இருந்தோரை அவரிடம் கூட்டிவந்தார்கள். அவர் ஒவ்வொருவர்மேலும் தம் கைகளை வைத்து அவர்களைக் குணமாக்கினார். பேய்களும், ”நீர் இறைமகன்” என்று கத்திக் கொண்டே பலரிடமிருந்து வெளியேறின. அவர் மெசியா என்று பேய்கள் அறிந்திருந்தபடியால், அவர் அவற்றை அதட்டி, பேசவிடாமல் தடுத்தார். பொழுது விடியும் வேளையில் இயேசு தனிமையான ஓர் இடத்திற்குப் புறப்பட்டுச் சென்றார். திரளான மக்கள் அவரைத் தேடிச்சென்றனர் அவரிடம் வந்துசேர்ந்ததும் தங்களைவிட்டுப் போகாதவாறு அவரைத் தடுத்து நிறுத்தப் பார்த்தனர். அவரோ அவர்களிடம், ”நான் மற்ற ஊர்களிலும் இறையாட்சியைப்பற்றி நற்செய்தி அறிவிக்கவேண்டும் இதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கிறேன்” என்றுசொன்னார். பின்பு அவர் யூதேயாவிலுள்ள தொழுகைக்கூடங்களில் நற்செய்தியைப் பறைசாற்றிவந்தார்.

**தியானம்:** இன்று தூய அன்னை திரேசம்மாளின் நினைவு நாளை கொண்டாட திருச்சபை எம்மை அழைககின்றது. இன்யை இறைவார்த்தையின் ஒளியில் அன்னை திரேசாவின் வாழ்க்கை வரலாற்றை ஒப்பிட்டு பார்ப்போமானால் நிறைய ஒற்றுமைகளை காண முடியும். இன்றைய நற்செய்தியில் “நான் மற்றைய ஊர்களிலும் இறையாட்சியைப் பற்றிய நற்செய்தியை அறிவிக்க வேண்டும் அதற்காகவே நான் அனுப்பப்பட்டேன்”(லூக்.4:43) என்று இயேசு கூறுவதன் மூலம் பணிகளில் மறை பணிக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. இறைமகன் இயேசு தமது பணியை நன்கு அறிந்திருந்தார். எல்லா மக்களினத்தாரையும் தேடிச்சென்று அவர்களின் நோய்களைக் குணமாக்கினார், பசித்தோர்க்கு உணவளித்தார், இறந்தோரை உயிர்ப்பித்தார். இவ்வாறாக இறையரசைப் பறைசாற்றினார். தான் உலகத்திற்கு வந்ததன் நோக்கத்தை வெளிப்படுத்தினார். முதல் வாசகத்தில் பவுலடியாரும் கூட இயேசுவின் பணியை சுட்டிக்காட்டினார். இந்த வரிசையில் தூய அன்னை திரேசாவும் தனது பணி என்ன என்பதை நன்கு அறிந்துகொண்டவராக தனது சொந்த நாட்டைவிட்டு பிறதேசம் சென்று ஏழை, எழிய மக்களுடன் வாழ்ந்தார். அங்கே நோயுற்றவர்களை பராமரித்தார். இறையரசை கொண்ட நமது குறிக்கோள் என்ன? கடவுள் நம்மூலமாக எதை எதிர்பார்க்கின்றார்? இதைப்புரிநது செயல்டுவோமா?